# மெட்ரோ பயணியருக்கு ஆலந்துாரில் வேன் வசதி

சென்னை, ஜன. 31–

மெட்ரோ ரயில் பயணியருக்கு, ஆலந்துார் ரயில் நிலையத்தில் வேன் வசதி, நேற்று துவக்கப்பட்டது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரலுக்கும், விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயில்களில் பயணியர் வருகையை அதிகரிக்க, நிலையங்களில் வாடகை இல்லா சைக்கிள், கட்டண ஷேர் ஆட்டோ, கார், வேன், மின்சார ஆட்டோ, மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் வசதி செய்யப்பட்டுள்ளன.

இத்துடன், மெட்ரோ ரயில் பயணியருக்கு, முக்கிய நிலையங்களில் வேன் வசதியும் செய்யப்பட்டு வருகின்றன.

ஆலந்துார் நிலையத்தில், நேற்று வேன் வசதியை, சென்னை மெட்ரோ ரயில் போக்குவரத்து பிரிவு இயக்குனர், நரசிம்ம பிரசாத் துவக்கி வைத்தார்.




■ வேன் வசதி திட்டத்தை, மெட்ரோ ரயில் போக்குவரத்து பிரிவு இயக்குனர், நரசிம்ம பிரசாத், கொடி அசைத்து துவக்கி வைத்தார்.